www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi11T

# தென்காசி மாவட்டம்

## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

09-12-24

-----

## வகுப்பு 11

## பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களுக்கும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்றுவிடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

1) பொத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க

1) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்  2) பவணந்தி முனிவர் - நன்னூல்

3) சு.வில்வரத்தினம் - ஆறாம்திணை  4) இந்திரன்-பேச்சுமொழியும்கவிதைமொழியும்

அ) 1, 2  ஆ) 1, 4  இ) 2, 4  ஈ) 1, 3

2) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை

1) மதிப்புக் கூட்டுப்பொருள்கள்  2) நேரடிப்பொருள்கள்

அ) 1 மட்டும் சரி  ஆ) 2 மட்டும் சரி  ஈ) இரண்டும் சரி  ஈ) 1-தவறு, 2-சரி

3) காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன்  ஆ) அண்ணாமலையார்

இ) முருகன்  ஈ) பாரதியார்

4) 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை  ஆ) குறுந்தொகை  இ) அகநானூறு  ஈ) ஐங்குறுநூறு

5) முல்லைநிலத்தின் சிறுபொழுது

அ) மாலை  ஆ) யாமம்  இ) நண்பகல்  ஈ) எற்பாடு

6) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர்  ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி  ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

7) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ………… நினை

அ) முகக்குறிப்பை அறிந்தவரை  ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை  ஈ) சொல்லேர் உழவரை

8) 'அழகும் அறிவும்' இளமையும் வாய்ந்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர், மன்னரிடம்  ஆ) அமைச்சர், கவிஞரிடம்

இ) மன்னர், அமுத வல்லியிடம்  ஈ) மன்னர், அமைச்சரிடம்

9) மனோன்மணீயம் நூலில் உள்ள கிளைக்கதை

அ) சிவகாமியின் சரிதம்  ஆ) பாஞ்சாலி சபதம்

இ) சிவகாமியின் சபதம்  ஈ) இரகசிய வழி

10) 'பால் நிலாப் பாதை' என்ற நூலை எழுதியவர்

அ) ஏ.ஆர்.ரகுமான்  ஆ) இளையராஜா  இ) கங்கை அமரன்  ஈ) பாரதிராஜா

11) 'காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல் யாழ்வரைத் தங்கி யாங்கு' - என்ற வரி இடம் பெற்ற நூல்

அ) அகநானூறு  ஆ) புறநானூறு  இ) கலித்தொகை  ஈ) பரிபாடல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12) ஒப்புரவு என்பதன் பொருள் .............

அ) அடக்கமுடையது  ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது  ஈ) செல்வமுடையது

13) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல்  ஆ) சிற்றில்  இ) சிறுதேர்  ஈ) சிறுபறை

14) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர்மொழி

அ) வாய்க்கால்  ஆ) நாங்கூழ்  இ) நடராசன்  ஈ) புல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** **3×2=6**

15) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

17) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

18) அகநானூறு எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது? அவை யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** **2×2=4**

19) 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

20) தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்புவரைக.

21) சங்காலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** **7×2=14**

22) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) ஈன்ற  ஆ) அலர்ந்து

24) **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக**

அ) நீரோடை  ஆ) செங்கயல்

25) **பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

பொரி, பொறி

26) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக**

அ) Emotion

ஆ) Mass Drill

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

தங்கை (அ) அறிவில்லாதவன்

28) **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) குயில் கத்த நாய் ஊளையிட்டது

ஆ) சோறு சாப்பிட்டு, நீர் பருகினான்

29) கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக

30) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

கோசலமக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி- III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

31) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

33) 'சேர நாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

35) ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?

36) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக

37) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

38) ஃபிரஸ்கோ ஓவியங்கள், கற்றளிக்கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தருக.** 3×4=12

39) சொற்பொருள் பின்வரும் நிலையணியை எடுத்துக்காட்டுத்தந்து விளக்குக.

**(அல்லது)**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40) இலக்கியநயம் பாரட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

- பாரதியார்

திருக்குமார்.ப,
பதிரம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம் - 627809
தென்காசி மாவட்டம்.

41) யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை - பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

42) **பேச்சு வழக்கை எழுத்துவழக்காக மாற்றியமைக்க**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்

ஆ) காலத்துக்கேத்த மாரிப்புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்

இ) தேர்வெழுத வேகமாகப்போங்க. நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்

ஈ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது

43) **தமிழாக்கம் தருக.**

அ) The pen is mightier than the sword

ஆ) Work while you work and play while you play

இ) Knowledge rules the world

ஈ) Education is the most powerful weapon, which you can use to change the world

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43) **காதுகேளாதவர்களுக்கான மாற்றுவினா**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர். 'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனனும் சொல் மொழி கவிதை என்பனவற்றைத் தாண்டிப் 'பல்கலைப்புலமை' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'தமிழ்கெழு கூடல்' என்றவிடத்திலும் 'கலைப்புலமை' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் 'தமிழ்தழீஇய சாயலவர்' என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொளாகின்றன. தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ்இவை பத்துமே', 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள். 'தமிழ்மாலை' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும் .

**வினாக்கள்**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் குறிப்பிடுக
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி- IV

**அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3×6=18**

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும வடகரை, தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்

**(அல்லது)**

ஆ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'-இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்

**(அல்லது)**

ஆ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விளக்குக.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி- V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

47) அ) 'உண்டால் அம்ம இவ்வுலகம்' .......... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

ஆ) 'செயல்' என முடியும் குறள்

\- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com